செயற்பொறியாளர் (வே.பொ), பெரம்பலூர் அவர்களின் செயல்முறை ஆணைகள்.
பிறப்பிப்பவர்: திரு. S. எட்வின் பாப்ளி, பி.இ(விவ)., எம்.பி.ஏ.,

செ. மு. ஆணை எண் அ/440/19 நாள். .09.2019

பொருள்: பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் – தொகுதி IV 2015-16, 2016-17, 2017-18–ஆம் ஆண்டிற்கான போட்டித் தேர்வு – இளநிலை உதவியாளர்(பிணையம் அற்றது) பதவியில் பணியில் சேர்ந்து கொண்டது – பணி வரன்முறை செய்து ஆணையிடல் – தொடர்பாக.

பார்வை:
1. வேளாண்மை இயக்குநர், சென்னை – 5 அவர்களின் கடித எண்: அபபி3/23567/2019 நாள்: 20.07.2019.
2. தலைமைப் பொறியாளர்(வே.பொ), சென்னை அவர்களின் கடித எண்: அப2/8448/2019, நாள்: 14.08.2019.

******

**ஆணை:**

பார்வையில் காணும் கடிதங்களின்படி, 2015-16, 2016-17, 2017-18–ஆம் ஆண்டில் தொகுதி IV-ல் அடங்கிய பதவிகளுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் போட்டி தேர்வின் வழியாக தேர்வு செய்யப்பட்டு, இளநிலை உதவியாளர்(பிணையம் அற்றது) ஆகப் பணியில் சேர்ந்து கொண்டவர்களின் பணியினை வரன்முறை செய்வது தொடர்பாக, பார்வை (1)–இல் காணும் கடிதத்தில் வழங்கப்பட்ட தெளிவுரைகளின் அடிப்படையில், இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து கொண்ட செல்வி. செ. செல்வகுமாரி அவர்களது பணியினை, தனியர் பணியில் சேர்ந்து கொண்ட நாளான 15.03.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

இப்பணி வரன்முறை ஆணை கீழ்க்காணும் நீதிமன்ற உத்தரவிற்கு உட்பட்டது.

"This regularization is subjectto the outcome of the W.Ps pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in combined Civil Services Examination IV for the year 2015-16, 2016-17, 2017-18 recruitment."

இப்பணியாளர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது.

இப்பணியாளர் தகுதிகாண் பருவ காலத்தில் வரையறுக்கப்பட்ட பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினை நிறைவு செய்த பின்னரே தகுதிகாண் பருவம் முடித்ததாக ஆணையிடப்படும் எனவும், அதன் பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் பெறத் தகுதியுடையவராவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

25/9/19

செயற்பொறியாளர் (வே.பொ)(பொ),
பெரம்பலூர்.

25/9/19

பெறுநர்
செல்வி. செ. செல்வகுமாரி, இளநிலை உதவியாளர், இவ்வலுவலகம்.
நகல்– தலைமைப் பொறியாளர்(வே.பொ), சென்னை–35 அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்– கண்காணிப்புப் பொறியாளர்(வே.பொ), திருச்சி அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
✓நகல் – பணிப்பதிவேட்டிற்கு
நகல் – இருப்புக் கோப்பு
உபரி – 1